**JM II Court, Erode** **Dt.29.07.2026**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ERODE

CC No. 227/2026

2026ம் ஆண்டு ஜீலை மாதம் 29-ம் தேதியன்று அரசு சாட்சியாக விசாரிக்கப்படும் இவ்வாக்குமூலம் 1969ம் ஆண்டு 54-வது சட்டத்திலுள்ள 6(2) பிரிவுகளின்படி திரு.S.ராஜ்குமார், குற்றவியல் நீதிமன்றம் எண்.II, ஈரோடு அவர்களால் ஆணையிடப்பட்டு, திரு.T.சரவணகுமார், பலகை எழுத்தர் நிலை - III அவர்கள் மூலமாக சத்திய பிரமாணம் செய்யப்பட்டு, சாட்சியிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

Deposition of Witness PW6

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : மாதேஷ்வரன் | தொழில் | : |
| த/க பெயர் | : | வயது | : |
| அலைபேசி | : | முகவரி | : |
| ஆதார் எண் | : | | |

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் தற்போது ஈரோடு கருங்கல்பாளையம் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 25.01.2026 அன்று ஈரோடு நகர காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்த போது பகல் 12.30 மணி அளவில் ஆறுமுகம் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரினை பெற்று நிலைய குற்ற எண்.23/26, சட்டப் பிரிவுகள் 296(b), 115(2), 351(3) BNS பிரிவுகளின் கீழ்

S RAJKUMAR

Digitally signed by S RAJKUMAR
Date: 2026.07.29 16:27:18 +0530

முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து அசல் புகார் உடன் முதல் தகவல் அறிக்கை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்து பிற நகல்களை உயர் அதிகாரிகளுக்கும், புலன்விசாரணை அதிகாரியின் பார்வைக்கும் வைத்தேன். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்பந்தமாக உதவி ஆய்வாளர் என விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

உதவி ஆய்வாளர் என்னை எங்கு வைத்து எப்போது விசாரித்தார் என்றால் 25.01.2026 அன்று நிலையத்தில் வைத்து விசாரித்தார். புகார் எந்த தேதியில் எங்கு வைத்து கொடுக்கப்பட்டது என்ற விவரம் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். 25.01.2026 அன்று நிலையம் ஆஜராகி கொடுத்தார். வழக்கு சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நாள் 24.01.2026 என்றும் ஒருநாள் தாமதமாக 25.01.2026 அன்றுதான் புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொல்லியது போல் புகார் எதுவும் பெறவில்லை என்றும் அதன் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை எதுவும் பதிவு செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

S RAJKUMAR

Digitally signed by S RAJKUMAR
Date: 2026.07.29 16:27:24 +0530